# சிசு சவிய 2021

## 5ம் தர மாணவர்களுக்கான கைக்கோர்ப்பு

5

ஐந்தாம் தர மாணவர்களுக்காக நடாத்தப்படும் மாதிரி பரீட்சை
சப்பிரகமுவ மாகாணம்

# விடுமுறைக் கால விஷேட முன்னோடிப் பரீட்சை

**வினாத்தாள் II** **ஒரு மணித்தியாலம் 15 நிமிடம்**

**பெயர் :.......................................................................................................**

## சப்பிரகமுவ கல்வி திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் கையளிப்பு

பரீட்சார்த்திக்கான அறிவுறுத்தல்,

- உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை மேலே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
- அது போன்று மூன்றாம் பக்கத்திலும் உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 61 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை எழுதுக.
- கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.
- விடை எழுத வேண்டிய வினாக்களின் விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

## விசேட அறிவித்தல்கள் (கவனத்திற்கு)

**பாடசாலை அதிபர்களுக்கானது..**

* இவ் வினாத்தாளினை அச்சிட்டு அல்லது பிரதி எடுத்து (2021-10-10) ஒக்டோபர் மாதம் 10ம் திகதிக்கு முன்பே தங்கள் பாடசாலையில் தரம் 5ல் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.
* வினாப்பத்திரம் தொடர்பாக சந்தேகங்கள், பிரச்சினைகள் இருப்பின், தங்களது கோட்டத்திற்குப் பொறுப்பான ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர், வலயத்தின் ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் அல்லது மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்ப பிரிவிற்கு அழைத்து ஆலோசனை பெறவும்.
* புள்ளிகளை தொலைபேசி மூலம் பெற்று அறிக்கைப் படுத்த ஆவண செய்யுங்கள்.
* விடைகள் தொடர்பாக பெற்றோர்களுக்கு சந்தேகங்கள் இருப்பின் வகுப்பு பொறுப்பாசியரின் உதவியைப் பெற்றுக் கொடுக்கவும்.
* வேறு மாகாணம், வலயங்களைச் சேர்ந்த மாணவர்களாயினும் வினாப்பத்திரத்தை வழங்குங்கள்.
* இவ்வேலைத்திட்டம் தொடர்பான தங்களின் ஒத்துழைப்பிற்கும், அர்ப்பணிப்பிற்கும் வாழ்த்துக்கள்.

**அன்பான பெற்றோர்களே ! பிள்ளைகளே !**

* கொவிட் -19தொற்று நோயால் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளன..
* வீடுகளில் இருக்கும் தரம் 5 மாணவர்களுக்காக சிசு சவிய முன்னோடி பரீட்சை வினாத்தாள்களை வழங்குகின்றோம்.
* சகல பிள்ளைகளும் (2021-10-10) ஒக்டோபர் 10ம் திகதி இவ்வினாப்பத்திரத்திற்கு வீட்டில் இருந்தே விடையளிப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்.
* நேர அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| பகுதி I | பகுதி II |
|---|---|
| 1 மணித்தியாலயம் | 1 மணி 15 நிமிடங்கள் |

* வீட்டில் தகுந்த இடத்தை தெரிவுசெய்து வினாத்தாள்களுக்கு விடையளிக்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும்.
* எவ்விதமான இடையூறுகள், அழுத்தங்கள் கொடுக்காது, சுயமாக வினாப்பத்திரத்திற்கு விடையளிக்க உதவுங்கள்.
* குறிப்பிட்ட தினத்தில் மேற்கொள்ள இயலாதுவிடின் வேறொரு நாளில் விடையளிக்க சந்தர்ப்பம் வழங்குக.
* மிகவும் மகிழ்ச்சியாகவும், விநோதமாகவும் விடையளிக்க ஆற்றல் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறோம்.

சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவு



(மறு பக்கம் பார்க்க)

01). பின்வரும் பந்தியை நன்றாக வாசியுங்கள்.

புராதன மக்களால் கட்டப்பட்ட கட்டடங்கள், வணக்கத்தலங்கள், சிற்பங்கள், உபகரணங்கள், சின்னங்கள் போன்ற தொல்பொருள்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாகும். இவை எமது தேசிய சொத்துக்கள். எமது பண்டைய காலச் சிறப்புக்களை எதிர்கால சந்ததியிரான நாம் அறிந்து கொள்வதற்காகவும், மழை வெயில் இயற்கை அனர்த்தங்களில் இருந்து அழிவடையாது இருக்கவும், தொல்பொருள் ஆராச்சி திணைக்களத்தால், கண்ணை இமைக்காப்பது போல இப்பெறுமதி மிக்க சொத்துக்களைப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர்.

❖ **பந்தியைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

i). பந்தியில் கூறப்பட்டுள்ள தொல்பொருள்களில் இரண்டை எழுதுக.

........................................ ................................................

ii). நவீன என்ற சொல்லின் எதிர்ப்பதத்தை எழுதுக. ....................................................

iii). தொல்பொருள்களை ஏன் பாதுகாக்க வேண்டும்? ....................................................

iv). இப் பந்தியில் வந்துள்ள உவமானம் யாது?...............................................................

v). செயற்கை என்ற சொல்லின் எதிர் கருத்துச் சொல்லை எழுதுக. ...................................

vi). தொல்பொருள்களைப் பாதுகாக்கும் அமைப்பு எது? ...................................................

02). கீழ் தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குப்படுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
படித்து / நீ / நன்றாகப் / சிறப்பாகச் / பரீட்சையில் / எனது / வாழ்த்துக்கள் / சித்தியடைய

..........................................................................................................................................

03). பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாயின் (√) எனவும், பிழையாயின் (X) எனவும் அடைப்புக்குறிக்குள் அடையாளமிடுக.

i). நான் அடுத்த மாதம் கல்விச் சுற்றுலா செல்ல உள்ளேன். ( )

ii). நாங்கள் வயல்வெளியைக் கண்டு இரசிக்க வந்தோம். ( )

iii). சிறுவர்கள், சிறுவர் தினத்தன்று குதூகலமாக இருந்தார். ( )

iv). பெற்றோர் எம்மை நல்வழிப்படுத்துபவர்களாவர். ( )

04). பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.
அதிபர் எம்மை பார்த்து பிள்ளைகளே மகிழ்ச்சியுடன் சென்று வாருங்கள் என வாழ்த்தினார்

05). பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான பழமொழிகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.

i). ஒரு விடயத்தை நன்கு ஆராயாது அதனில் ஈடுபடலாகாது.

...............................................................................................................

ii). எல்லை கடந்த ஆசை துன்பந்தரும்

...............................................................................................................

06). பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i). வாய்க்கால் வழியே ............ ( குளத்து நீரை / குலத்து நீரை ) வயல்களுக்குப் பாய்ச்சுவர்.

ii). நிலத்தைப் ............( பண்படுத்துவதன் / பன்படுத்துவதன் ) மூலம் அதிக விளைச்சலைப் பெற முடியும்.

iii). ஆத்திச்சூடி நாம் சிறப்புடன் வாழ வழிகாட்டும் ........................ ( அரக்கருத்துக்களைத் / அறக்கருத்துக்களைத் ) தருகின்றது.


07). பின்வரும் மரபுத்தொடரின் கருத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
தட்டிக் கொடுத்தல் - ....................................................................

08). பின்வரும் தொடர்மொழிக்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.
கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி பிழை பார்க்கும் நிகழ்வு - ....................

09). பெண்பால் சொல்லை எழுதுக.
i). கடா - .................................. ii). நண்பன் - ...........................

10). பின்வரும் வாக்கியத்தை எழுத்து மொழியில் எழுதுக.
முட்டை வித்த காசைப் பையில் வெப்பேன் - ........................................................................

11). மரபுரீதியான கடிதத்தின் மாதிரி வடிவமைப்பு தரப்பட்டுள்ளது. வெற்றிடத்தில் வரவேண்டிய பகுதிகளை எழுதுக.




12). பின்வரும் வாக்கியத்தில் உயர்திணை ஆண்பால் இறந்தகால வினைச் சொல்லின் கீழ்க் கோடிடுக.

**இராம நாமத்தைப் பாடிய படி ஓடத்தைச் செலுத்தினான்.**

13). i). ஒத்தக்கருத்துச் சொல்லை எழுதுக.
விசும்பு - ......................................
ii). எதிர் கருத்துச் சொல்லை எழுதுக.
ஐக்கியம் - ....................................

14). தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

i).  ................................

ii).  ................................

15). கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குப்படுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.
i). is / This / house / my - ……………………………...........................
ii). pet / Do / have / you / a / ? - ...............................................................

16). கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i). He …………………. ( have / has ) a red shirt .

ii). These ………………… ( are / is ) animals.

17). i). பின்வரும் வாக்கியம் தமிழில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

மட்ட பொ(த்)த தென்ன - .........................

ii). பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

சோறு சாப்பிட வாருங்கள் - ..........................................................................


❖ **தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.**

18). i). 40100 கட்டத்தினுள் தரப்பட்டிருக்கும் எண்ணிற்கு முந்திய எண்ணின் எண் பெயரை எழுதுக. .........................................................................................................

ii). 8 4 1 3 5 வட்டமிடப்பட்டுள்ள எண்ணினால் வகை குறிக்கப்படும் பெறுமானம். ................

19). தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

6785 , 6875 , 6578 , 6587 - ......................................................................


20). 

தரப்பட்டுள்ள உருவில்,

i). 0.4ஐ நிழற்றிக்காட்டுக.

ii). நிழற்றப்படாத பகுதியை பின்னமாக எழுதுக. ................

iii). 36 கொய்யாப்பழங்களின் ¾ பங்கில் எத்தனைக் கொய்யாப்பழங்கள் உள்ளன? ...............

21). 

i). இத்திண்மத்தின் பெயர் யாது? ...............................................


ii). இதன் விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ............................

iii). இத்திண்மத்தின் உச்சிகளினதும், முகங்களினதும் கூட்டுத்தொகை யாது? ......................

22). பாடசாலையொன்றில் உள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை 1438 ஆகும். ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை 1605 ஆகும்.

i). இப்பாடசாலையில் உள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது? ........................

ii). இப்பாடசாலையில் பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகள் எத்தனைப் பேர் அதிகமாக உள்ளனர்? .........................................

23). 

i). மீன்தொட்டியில் உள்ள மீன்களின் எண்ணிக்கையை உரோம எண்குறியில் எழுதுக. ............................

iv

ii). கட்டத்தில் உள்ள உரோம எண்குறியை இந்து - அராபிய எண்குறியில் எழுதுக. ............................

24). கட்டத்தினுள் தரப்பட்டிருக்கும் எண்களில் 9இன் மடங்குகளை மட்டும் தெரிந்து ஒழுங்குமுறையில் எழுதுக.

| | | |
|---|---|---|
| 63 | 75 | 45 |
| 39 36 | 54 | 47 |

.......................................


25). 707 புத்தகங்களை, ஒரு பொதியில் 6 புத்தகங்கள் வீதம் பொதிகளாகக் கட்டினர்.
i). 6 புத்தகங்கள் வீதம் எத்தனை பொதிகள் உள்ளன? ..............................
ii). எஞ்சியுள்ள புத்தகங்களின் எண்ணிக்கை யாது? ..............................

26). i). பின்வரும் விலைப்பட்டியலை நிரப்புக.

| பொருள் | வாங்கிய அளவு | 1kg இன் விலை | | செலுத்த வேண்டிய பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் |
| மிளகாய் | 750g | 600 | 00 | .................... | ........ |
| பருப்பு | 500g | 156 | 00 | .................... | ........ |
| மொத்தப் பணம் | | | | .................... | ......... |

ii). இப் பொருள்களை வாங்கிய ஒருவர் 1000 ரூபாவைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு? ............................

27). ஒரு மணித்தியாலத்தில் வீதியில் பயணித்த வாகனங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம் நிரல் வரைபில் காட்டப்பட்டுள்ளது.




i). வீதியில் பயணித்த முச்சக்கரவண்டிகளின் எண்ணிக்கை, பேருந்துகளின் எண்ணிக்கையின் அரைப்பங்காகும். அதனை வரைபில் வரைந்து காட்டுக.

ii). ஒரு மணித்தியாலத்தில் வீதியில் பயணித்த மொத்த வாகனங்களின் எண்ணிக்கை யாது? ........................

28). சமய நிகழ்வொன்று மு.ப 10.30இற்கு ஆரம்பிக்கப்பட்டு பி.ப 5.10இற்கு முடிவடைந்தது.
i). அந்நிகழ்வுக்கு செலவான காலம் எவ்வளவு? ..............................
ii). அந்நிகழ்வு முடிவடைந்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக................

29). சமமான நீளங்களை கொண்ட 5 கம்பிகள் உள்ளன. ஒரு கம்பியின் நீளம் 260m 20cm ஆகும். எனின் 5 கம்பிகளினதும் மொத்த நீளம் எவ்வளவு? ................................

30). i). 28050 mஐ கிலோமீற்றர், மீற்றரில் தருக. ............................................
ii). 17km 60mஐ மீற்றரில் தருக. ............................................

❖ **இலக்கம் 31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.**

31). "முத்தோர் சொல் வார்த்தைகளை மறக்கவேண்டாம்" என்ற உலக நீதி அடியின் கருத்தாவது,
i). எப்போதும் உண்மை பேச வேண்டும்.

ii). முத்தோர் வார்த்தைகளை மறக்கக்கூடாது.
iii). செய் நன்றி மறக்கக்கூடாது.

32). நவராத்திரி விழாவைக் கொண்டாடுபவர்கள்,
i). இந்துக்கள் ii). கிறிஸ்தவர்கள் iii). இஸ்லாமியர்கள்

33). தேசிய கொடியில் சிவப்பு நிறம் குறிப்பது,
i). தமிழ் மக்களை
ii). சிங்கள மக்களை
iii). ஒற்றுமையும் முழுமைப்பாட்டையும்

34). இலங்கையின் அரச இலட்சினையில் நெற்கதிரினால் உணர்த்தப்படுவது.
i). சௌபாக்கியமும், முழுமையும்
ii). நிலைப்பாடு
iii). தன்னிறைவும் , செழிப்பும்

35). சந்தையில் கொள்வனவு செய்யும் குடிபானமொன்றில் சீனியின் அளவைக் குறைவாகக் காட்டும் நிறமாவது,
i). சிவப்பு ii). பச்சை iii). மஞ்சள்

36). அதிக நீரை சேமித்து வைத்துக் கொள்ளும் மரம்,
i). தென்னை மரம் ii). இறப்பர் மரம் iii). பலாமரம்

37). வீதி சமிக்ஞை விளக்கில் சிவப்பு நிற விளக்கு எரியும் போது,
i). வாகனத்தை நிறுத்த வேண்டும்.
ii). வாகனத்தை செலுத்த வேண்டும்.
iii). வாகனத்தை செலுத்த தயாராக வேண்டும்.

38). இலங்கையின் மிக உயரமான மலை மற்றும் நீர் வீழ்ச்சியினை குறிக்கும் விடை முறையே,
i). கிரகல் பொத்த , பம்பரகந்த
ii). பம்பரகந்த , தியலும
iii). பிதுருதலாகலை , பம்பரகந்த

39). காற்றின் மூலம் வெடித்தல் மற்றும் நீரின் மூலம் பரம்பலடைக்கூடிய வித்துக்கள் முறையே,
i). எருக்கலை, இறப்பர், தேங்காய்
ii). எருக்கலை , கடல் மாங்காய் , தேங்காய்
iii). வேங்கை, தேங்காய் , எருக்கலை

40). பயிர்களை பாதுகாக்க செய்யக்கூடிய இயற்கை வழிமுறையொன்று,
i). பூஞ்சணத்தை நீக்க சவர்க்கார நீரைப் பயன்படுத்துதல்.
ii). செண்பகங்கள் மூலம் நத்தைகளை உண்ணச் செய்தல்.
iii). வேப்ப வித்துக்களை இடித்து, நீரில் கலந்து தெளித்தல்.

41). உலர்த்துதல், மணலில் புதைத்தல் மூலம் பாதுகாக்கக்கூடிய உணவு,
i).எழுமிச்சை ii). பிளிங்காய் iii). புளி

42). "கட்டுமரத் தோணியிலே ஏலேலோ ஐலசா" இப்பாடல்,
i). மீனவப்பாடல் ii). சேனைக்காத்தல் பாடல் iii). அறுவடைப் பாடல்

43). இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அதிவேகப் பாதை,
i). கட்டுநாயக்கா அதிவேகப் பாதை
ii). தெற்கு அதிவேகப் பாதை
iii). கொழும்பு - கண்டி அதிவேகப் பாதை


44). காற்றோட்டமான சூழலில் வாழும் பிராணிகளை உள்ளடக்கிய விடையாவது,
i). தேனீ , வண்ணத்துப்பூச்சி , குருவி
ii). ஈ , தேனீ , அணில்
iii). குருவி , மீன் , யானை

45). பொது வாகனத்தில் பிரயாணம் செய்யும் போது காண முடியாத பதாகையொன்று,
i). கர்ப்பிணிப் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
ii). அங்கவீனர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது
iii). சிறு பிள்ளைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

46). அழுகிய, காய்ந்த இலை, குழை, தாவரப் பகுதிகள் மற்றும் சாணத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற பசளையாவது,
i). சேதனப் பசளை ii). இரசாயனப் பசளை iii). யூரியா

47). பெரிய நீர்தேக்கங்களில் அடிப்பகுதியின் அகலம் அதிகரிப்பதற்கான காரணம்,

i). அணையின் அடிப்பகுதியில் நீரின் அமுக்கம் குறைவாக இருப்பதால்
ii). அணையின் அடிப்பகுதியில் நீரின் அமுக்கம் கூடுதலாக இருப்பதால்
iii). அணையின் அடிப்பகுதியினை அழகுபடுத்துவதற்காக

48). வெளிச்சம் அதிகமாக கிடைக்கக்கூடியது,

A B C
i). A ii). B iii). C

49). வரைபடமொன்றில் பாதைகளை அறிவதற்கு ஊதா, சிவப்பு மற்றும் கறுப்பு நிறங்களால் பயன்படுத்தப்படுகின்ற குறியீடுகள் முறையே,
i). புகையிரதப் பாதை, பெருந்தெரு , அதிவேகப் பாதை
ii). அதிவேகப் பாதை, பெருந்தெரு , புகையிரதப் பாதை
iii). அதிவேகப் பாதை, புகையிரதப் பாதை, பெருந்தெரு


50). "தீபக்குடிசை அமைத்தல்" என்பதனால் கருதப்படுவது,
i). விதைப்புச் செய்து வெளியேறும் நாளன்று அமைக்கும் குடிசை.
ii).தெய்வத்திற்குப் பூசை செய்தல்.
iii). புனித நீர் தெளித்தல்.

51). விற்றமின் B அடங்கிய உணவுத் தொகுதியாவது,

i). நெல்லி, மரமுந்திரிப்பழம், பசளி
ii). சோயா, போஞ்சி, வெண்டிக்காய்
iii). சிறு இறால், நிலக்கடலை , இறைச்சி

52). கொழுப்புப் போசணைப் பதார்த்தங்கள் உடலுக்கு தேவையான அளவு கிடைக்காத போது ஏற்படக்கூடியது,
i). பசியின்மை ii). சக்தியின்மை iii). உடல் பொலிவிழத்தல்

53). இப்பரிசோதனையிலிருந்து நாம் அவதானிக்கக் கூடியது,




i). வட திசையை அறிதல்.
ii). நீரில் மிதக்கும் பொருட்களை அறிதல்.
iii). காந்தமொன்று மிதப்பதை அறிதல்

54). பயிர்ச்செய்கைக்கு சாதகமான , பாதகமான விலங்குகள் முறையே,
i). ஓணான் - குளவி ii). ஆந்தை - ஓணான் iii). செண்பகம் - கம்பளிப்பூச்சி

55). மருந்துகளைப் பெற்றுக் கொள்ளும் போது கவனிக்கப்பட வேண்டிய விடயம் அல்லாதது,
i). மருந்துகளை பெற்றுக் கொள்ளும் தடவைகள்.
ii). தான் விரும்பும் எந்த மருத்தையும் எடுத்தல்.
iii). வைத்தியர் ஒருவரின் ஆலோசனையைப் பெறல்.

56). கிராம சேவகர் நிலையத்தில் வாடிக்கையாளர் எனப்படுபவர் ,
i). கிராம சேவகர் ii). பிரதேச செயலாளர் iii). ஊர் மக்கள்

57). ஊவா , வெல்லஸ்ஸை கலகத்தை கட்டுப்படுத்துவதற்காக ஆங்கிலேயர்களால் அனுப்பப்பட்டவர்,
i). கெட்பட்டிப்பொலெ திசாவ ii). கொங்காலே கொட பண்டா iii). வீரபுரன் அப்பு

58). தீவிரமாகப் பரவும் கொரோனாத் தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் செயற்பாடு ஒன்று அல்லாதது,
i). சமூக இடைவெளியைப் பேணாமை.
ii). முகக்கவசம் அணிதல்.
iii). அடிக்கடி சவர்க்காரமிட்டு கைகளைக் கழுவுதல்.

59). வேலையை இலகுவாக்கும் உபகரணங்கள் மட்டும் உள்ளடங்கிய தொகுதி,
i). சாய்தளம், சாந்தகப்பை, சில்லுவண்டி
ii). சாய்தளம், பற்சில்லுகளும் சங்கிலியும் , கப்பி
iii). கப்பி, மேசை, கத்தி

60). துரித உணவு உண்பதன் மூலம் ஏற்படக்கூடிய நோய் அறிகுறிகள்,
i). நீரிழிவு, உயர்குருதியமுக்கம்
ii). அம்மை, மஞ்சட்காமாலை
iii). வயிற்றுக் கோளாறு, அசீரணம்

61). " எமது பாடசாலையின் பொதுச் சொத்துக்களைப் பேணிப் பாதுகாப்போம்." என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. ( ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும்,எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

i). ..........................................................................................................................

..........................................................................................................................

ii). ..........................................................................................................................

..........................................................................................................................

iii). ..........................................................................................................................

..........................................................................................................................